விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 359 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 27 செவ்வாய்க்கிழமை (13.12.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

### நாவலர் பெருமான் அவதரித்த 200ஆவது ஆண்டு நிறைவு

## நாவலர் மாநாடு நாளை ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஶ்ரீலஶ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவதரித்த 200ஆவது ஆண்டு நிறைவையொட்டி நாளை நாவலர் மாநாடு நல்லூர் மண்ணில் கோலாகலமாக ஆரம்பமாகவுள்ளது.

நாளை 14ஆம் திகதி தொடக்கம் 15, 16, 17, 18ஆம் திகதிவரையான ஐந்து நாட்கள் ஆறுமுகநாவலர் மாநாடு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம் பெறும். ▷11

### யாழ்.செல்வபுரத்தில்

## முதியவர் ஒருவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செல்வபுரம் பகுதியில் கிணறொன்றுக்குள் வீழ்ந்து முதியவர் ஒருவர் ▷11

### மானிப்பாய் - கட்டுடையில்

## கிணற்றிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கட்டுடை பகுதியில் உள்ள கிணறு ஒன்றிலிருந்து நேற்றுக் காலை ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் கட்டுடை பகுதியைச் சேர்ந்த ஆனந்தராஜா (வயது-43) ▷11

### தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுடன்

# ஜனாதிபதி இன்று கலந்துரையாடல்

(கொழும்பு)

- இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஆராயப்படும்.
- பேச்சுவார்த்தையில் இந்திய மத்தியஸ்தத்தை கோருவது தொடர்பில் ஆராய்வு.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று இன்று இடம் பெறவுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் இன்று மாலை 5.30 ▷02

### பலாலி விமான நிலையத்துக்கு

## யாழ்.நகர்ப் பகுதியிலிருந்து பேருந்து சேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பலாலி விமான நிலையத்துக்கு யாழ்.நகரிலிருந்து பேருந்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் இ.இரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ▷11

## யாழ்.சர்வதேச விமான நிலையத்திலிருந்து நேற்று முதல் சேவைகள் ஆரம்பம்

### சென்னையிலிருந்து விமானம் தரையிறங்கியது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச (பலாலி) விமான நிலையத்திலிருந்து சென்னைக்கான விமான சேவைகள் நேற்றுத் திங்கட்கிழமை முதல் ஆரம் ▷11



### மன்னார் பள்ளிமுனையில்

## ஹெரோயினுக்கு அடிமையான இளைஞன் உயிரிழப்பு

(மன்னார்)

மன்னாரில் ஹெரோயின் போதைப்பொருளுக்கு அடிமையான இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த இளைஞனே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக் ▷11

### கடமையிலிருந்த

## பிரதேச சபை சாரதி மீது துரத்தித் துரத்தி வாள்வெட்டு

### முல்லை முறுகண்டியில் சம்பவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு-முறுகண்டி பகுதியில் கடமையிலிருந்த பிரதேச சபைச் சாரதி ஒருவர் மீது காலை வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் ▷02

## இந்திய கடற்படை தளபதி இன்று இலங்கை விஜயம்

(கொழும்பு)

இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் ராதா கிருஸ்ணன் ஹரி ▷11

## அவதானமாக இருங்கள்

### பொதுமக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

மோசடி நடவடிக்கைகள் குறித்து அவதானமாக செயற்படுமாறு இலங்கை மத்திய வங்கி நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மோசடியான தொலைபேசி அழைப்புக்கள், குறுந்தகவல்கள், மின்னஞ்சல்கள் மற்றும் சமூக வலைத்தள வலையமைப்புகள் ஊடாக ஆட்களை ஏமாற்றும் நடவடிக்கைகள் குறித்து மிக அவதானமாக செயற்படுமாறு மத்திய வங்கி அறிவுறுத்தியுள்ளது. ▷11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

மணியளவில் இந்த சந்திப்பு இடம் பெறவுள்ளதாக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, தமிழ் தேசிய கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி உள்ளிட்ட தமிழ் தேசிய கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் முன்னதாக,

தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் தமிழ் மக்கள் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளிற்கிடையிலான சந்திப்பு இன்று கொழும்பில் நடைபெறும்.

தமிழ் அரசுக் கட்சி, ரெலோ, புளொட், தமிழ் மக்கள் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சிகளின் தலைவர்கள் இன்று காலை 10.30 மணிக்கு இரா.சம்பந்தனின் வீட்டில் சந்திக்கவுள்ளனர்.

இனப் பிரச்சினை தீர்வு விவகாரத்தை ஆராய, இன்று மாலை ஜனாதிபதி சர்வ கட்சி கூட்டத்தை கூட்டவுள்ளார்.

இந்த கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு முன்னதாக, தமிழ்க் கட்சிகள் தரப்பில் முன்வைக்கப்பட வேண்டிய விவகாரங்களில் ஒருமித்த கருத்தை எட்டுவதற்காக இந்த சந்திப்பு நடைபெறவுள்ளது.

இனப்பிரச்சனை தீர்வு பேச்சுவார்த்தையில் இந்திய மத்தியஸ்தத்தை கோர வேண்டுமென சி.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்தியிருந்தார். இந்த விவகாரம் இன்று ஆராயப்படும்.

இன்று ஜனாதிபதியுடனான சந்திப்பில் இதனை முன்மொழிவதா அல்லது இந்தியாவுடன் பேசி, அவர்களின் நிலைப்பாட்டை நாடி பிடித்தறிந்த பின்னர் முன்மொழிவதா என்பதை இன்று தமிழர் தரப்பு தீர்மானிக்கும். (ம-7)


## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு

- **கணக்காளர்**
- **கணக்கு பதியுநர் (பெண்கள்)** தேவை.

உயர்தர வர்த்தகப் பிரிவில் சித்தி அல்லது முன் அனுபவம்.
25 வயதிற்கு மேல்.
ஓய்வு பெற்றவர்களும்விண்ணப்பிக்க முடியும்.

**076 097 3121**


## பிரதேச சபை...

கீழ் உள்ள ஒலுமடு உப அலுவலகத்தில் பணியாற்றும் உழவு இயந்திரத்தின் சாரதியே வாள்வெட்டு தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

32 வயதுடைய மந்துவில் பகுதியில் வசித்துவரும் அன்ரன் பரமதாஸ் துசான் என்ற ஊழியரே வாள்வெட்டுக்கு இலக்கான நிலையில் மாங்குளம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முறுகண்டிப் பகுதியில் பிரதேச சபையின் கழிவகற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது அங்கு வந்த அடையாளம் தெரியாத மூவர் கொண்ட குழுவினர் துரத்தி துரத்தி வாளால் வெட்டியுள்ளனர்.(ம-7)

# சுதுமலையில் 2400 கிலோ மஞ்சளுடன் இருவர் கைது

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுதுமலை பகுதியில் வைத்து 2400 கிலோ எடையுடைய மஞ்சள் பொதிகளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் பொலிஸார் முன்னெடுத்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. குறித்த சந்தேகநபர்கள் இருவரும் பட்டா ரக வாகனத்தில் மஞ்சளைக் கடத்திச் சென்றவேளை இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7,33,104)


## நிர்வாக உத்தியோகத்தர் தேவை

பல்கலை பட்டதாரியாகவும் ஆங்கில அறிவு, கணனி அறிவுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
திருநெல்வேலிக்கு அண்மையில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

விண்ணப்பிக்க (13759)

mrandeo2011@yahoo.com


## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலக மேலதிக மாவட்ட பதிவாளர் கிளையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி **ஜெயசீலன் சுகன்ஜா** அவர்களின் அன்புத் தாயார்

அமரர் **செல்வரத்தினம் சறோசா**

அவர்கள் 11.12.2022 அன்று காலமாகிவிட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 10.03.1964 மறைவு 11.12.2022

**பிரிவுத்துயருடன்... பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.**

(C-5491)

## வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் உறுப்பினர்களை இணைத்துக் கொள்ளல்

மேற்படி வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் ஜனவரி 2023 ஆம் ஆண்டு நடைபெறவுள்ளது. அந்தவகையில் இந்த சம்மேளனத்தில் ஆலய பரிபாலன சபைகள் உட்பட பொது அமைப்புக்கள் இணைந்து கொள்ளலாம். எனவே இணைந்து கொள்ள விரும்பும் அமைப்புக்கள் 31.12.2022 இற்கு முன் வருட சந்தா ரூ 200/= ஐ செலுத்தி இணைந்து கொள்ளலாம்.

**செ.குமாரசிங்கம்(ஜே.பி)**
**செயலாளர்**
**வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம்**

**பட்டினசபை வீதி,**
**சங்கானை.** (13754)

## மரண அறிவித்தல்



பிறப்பு 15 – 05 – 1943

இறப்பு 12 – 12 – 2022

## பொன்னையா நடேசபிள்ளை

யாழ்ப்பாணம், வடமராட்சி தம்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் நாவலடி, புலோலி மத்தியை வாழ்விடமாகவும் கொண்ட பொன்னையா நடேசபிள்ளை அவர்கள் நேற்று (2022.12.12) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - பொன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும் நாவலடியைச் சேர்ந்த ஆழ்வாப்பிள்ளை - கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் ரவீந்திரராஜ், விஜயா, தேவராஜ், கோகுலராஜ், காலஞ்சென்ற கிருஷ்ணராஜ், அனுசா(யாழ். போதனா வைத்தியசாலை- தாதிய உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மினி, பாபு, தேமலா, பிரதிஜா மற்றும் முல்லைக்குமரன் அவர்களின் பாசமிகு மாமனாரும் தனோஜன், டிலக்ஷன், ரன்சிகா, நிவானுஷன், டனுஷன், கனோமிகா, கஸ்மிரா, லக்ஷின் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13.12.2022 இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் நாவலடி புலோலி மத்தியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நாவலடி,
புலோலி மத்தி. (C-5492) குடும்பத்தினர்

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் **மார்க்கண்டு சண்முகலிங்கம்**
(மூர்த்தி)

பிறப்பு: 01.05.1958
இறப்பு: 23.11.2021
திதி:அபரபக்க பஞ்சமி

எங்கள் குடும்ப குலவிளக்கே அப்பா...!
கண்மூடித் திறக்கும் முன்
ஓராண்டு கடந்துவிட்டது.
எங்கள் நெஞ்சறைக் கூட்டில் அழியா
ஓவியம் நீங்கள் அப்பா
உறவுகளைத் தவிக்கவிட்டு
இமைகளை மூடிவிட்டீர்களே...
நீங்கள் மறைந்து
ஓராண்டுபோனதென்ன?
உங்களை நினைத்து நெஞ்சம்
துடிப்பதென்ன
மறவோம் நாம் உங்கள்
அன்பு முகம்தனை...
*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

அண்ணாசிலையடி,
கரணவாய், கரவெட்டி. (13750)

குடும்பத்தினர்
077 127 2429

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கிலேயே

## அனைத்து கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை-அரசாங்கம்

**(கொழும்பு)**

**அரசியல் தீர்வைக்கான வேண்டுமென்ற நேர்மையான நோக்கத்துடன் நல்லெண்ண அடிப்படையில் சகல அரசியல் கட்சிகளுடனும் இன்று பேச்சு வார்த்தைகளை முன்னெடுக்கவுள்ளோம் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.**

மேலும், இனப்பிரச்சினை தீர்வுசெயற்பாட்டில் இந்தியாவின் கரிசனையை நாங்கள் புறக்கணிக்க முடியாது. இந்தியாவின் கரிசனையை குறைத்து மதிப்பிட முடியாது. இந்த விடயத்தில் இந்தியாவின் ஒத்துழைப்பை நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (நி)

# பேருந்துகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து

## காயமடைந்த மூவர் மருத்துவமனையில்



(கொழும்பு)

கொழும்பு - குருநாகல் பிரதான வீதியின் மெட்டிக்கும்புர அருகே இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான இரண்டு பேருந்துகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் 3 பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பு நோக்கிச் சென்ற பேருந்து மற்றைய பேருந்தை முந்திச் செல்ல முற்பட்ட போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அநுராதபுரம் பேருந்து டிப்போவுக்கு சொந்தமான இலங்கை போக்குவரத்து சபையின் இரண்டு பேருந்துகளே இவ்வாறு விபத்துக்குள்ளாகியதாக தெரியவந்துள்ளது.

காயமடைந்தவர்கள் குருநாகல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொல்கஹவெல பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி)

# பறவைகளால் பயிர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை தடுக்கும் விதைப்பு இயந்திரம்

(கொழும்பு)

பறவைகளால் பயிர்ச்செய்கைக்கு ஏற்படும் பாதிப்பை தடுப்பதற்காக புதிய நெல் விதைக்கும் இயந்திரம் ஒன்று அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

அங்குணுகொலபெலஸ்ஸ பகுதியில் முதன் முதலாக இந்த இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த இயந்திரம், விதைகளை விதைக்கும்போது, அவற்றை மயில் உள்ளிட்ட பறவைகள் உண்ண முடியாதவாறு தடுக்கும்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மயில்களின் பெருக்கம் அதிகரித்துள்ள நிலையில், நெல் விதைப்புக்கு பின்னர் ஏற்படும் பாதிப்புக்களும் அதிகரித்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

நெல் விதைப்பு இயந்திரங்களின் விலை சந்தையில் 72,000 ரூபாய் வரையில் உயர்ந்துள்ள நிலையில், இந்த புதிய இயந்திரம் 17,000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

# மக்களின் வாக்கு மூலம் அதிகாரத்தை பெற வேண்டும்

## நாமல் ராஜபக்ஷ

(கொழும்பு)

ராஜபக்ஷக்களை பழிவாங்க நாட்டை அழிக்காமல் அடுத்த பொதுத் தேர்தலில் முடிந்தால் தம்மை தோற்கடித்து காட்டுமாறு பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சவால் விடுத்துள்ளார்.

நேர்காணல் ஒன்றில் பங்குபற்றிய நாமல் ராஜபக்ஷ இதனை தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், 'நாட்டின் ஜனநாயகத்திற்கு மதிப்பளித்து அரசியலமைப்பின் பிரகாரம், தேர்தலில் நின்று மக்களின் வாக்கு மூலம் ஒரு நாட்டின் ஆட்சி அதிகாரத்தைப் பெற வேண்டும்.

அவ்வாறு செய்யாவிட்டால், போராட்டத்தின் மூலம் நாட்டில் ஏற்பட்ட பாதிப்பும் ,விடுதலை புலிகளால் ஏற்பட்ட பாதிப்பும் ஒன்றுதான்' என்றும் தெரிவித்துள்ளார். (நி)

# ஜனாதிபதியை தனியாக சந்தித்த பசில்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கும் இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.



நாட்டின் தற்போதைய நிலைமை, அரசியல் அமைப்பு மற்றும் பல விடயங்கள் தொடர்பில் இதன்போது பேசப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பசில் ராஜபக்ஷ நாட்டிற்கு வந்ததன் பின்னர் ஜனாதிபதியை சந்திப்பது இதுவே முதல் தடவை என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இருவருக்குமிடையில் மாத்திரம் இடம்பெற்ற இந்த கலந்துரையாடல் ஒன்றரை மணித்தியாலங்களுக்கு மேல் நீடித்ததாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (நி)

# ஆயுள் காப்புறுதி தரவை புதுப்பிக்காவிடில் ஓய்வூதியர்களின் ஓய்வூதியம் ரத்தாகும்

(கொழும்பு)

அடுத்த வருடம் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஆயுள்காப்புறுதிதரவு முறையை புதுப்பிக்காத ஓய்வூதியர்களின் ஓய்வூதியம் இடைநிறுத்தப்படும் என ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் ஜகத் டி. டயஸ் அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கும் எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

ஓய்வூதியம் பெறுவோரின் வாழ்க்கைச் சான்றிதழை எவ்வாறு சரிபார்க்க வேண்டும் என்பது குறித்து கிராம உத்தியோகத்தர்களுக்கு பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அறிவுறுத்தல் தொடர்பினை விடுத்துள்ளதாகவும் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

ஓய்வூதியம் பெறுவோர் கையொப்பமிட்ட படிவத்தை அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிராம உத்தியோகத்தர் பிரதேச செயலாளரிடம் கையளிப்பதுடன், அந்தத் தகவலின் அடிப்படையில் ஓய்வூதிய உத்தியோகத்தர்கள் தரவு அமைப்பை புதுப்பிக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# துறைமுகத்தில் சிக்கியிருந்த 4 லட்சம் கிலோ பால்மா விடுவிப்பு

(கொழும்பு)

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு திணைக்களத்தின் அனுமதி கிடைக்காததன் காரணமாக துறைமுகத்தில் சிக்கியிருந்த 4 இலட்சம் கிலோ கிராம் பால் மாவை 118 மில்லியன் ரூபாய் வங்கி உத்தரவாதத்தில் விடுவிக்கப்பட்டதாக பியோடேல் பால்மா நிறுவனத்தின் தலைவர் லக்ஷ்மன் விஜேசூரிய தெரிவித்தார்.

துறைமுகத்தில் காணப்பட்ட பால்மா கையிருப்பை விடுவிக்காவிட்டால் அது பழுதடையும் அபாயம் காணப்படுவதாகவும் அவ்வாறு இடம்பெற்றால் 600 மில்லியன் ரூபாய் நட்டத்தை சந்திக்க நேரிடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)



யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் பாரதியார் விழா நேற்று முன்தினம் 11 ஆம் திகதி மாலை நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் தலைமையில்நடைபெற்றது.

இதில் கம்பவாரிதி இ. ஜெயராஜை நடுவராக கொண்டு பாரதியின் நெஞ்சில் ஆழப்பதிவது - சமூகப் பாடல்களாலா/ பக்திப் பாடல்களாலா என்ற பொருளில் பட்டிமன்றம் இடம்பெற்றது. இதில் பேராசிரியர் ஸ்ரீ பிரசாந்தன் கம்பநேசன் இ. வாசுதேவா, வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம், செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் ஆகியோர் வாதிகளாகவும் பிரதிவாதிகளாகவும் கலந்து கொண்டனர். (படங்கள்:-சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லங்கா பிறீமியர் லீக் ஜப்னா கிங்ஸ் வெற்றி



லங்கா பிறீமியர் லீக் இருபது-20 தொடரின், 8 ஆவது லீக் போட்டியில் லைக்கா ஜப்னா கிங்ஸ் அணி, 51 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

கண்டி-பல்லேகல மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், லைக்கா ஜப்னா கிங்ஸ் அணியும் தம்புள்ளை அவுரா அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற தம்புள்ளை அவுரா அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய லைக்கா ஜப்னா கிங்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 240 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. லங்கா பிறீமியர் லீக் இருபது-20 தொடரில் அணியொன்று பெற்றுக் கொண்ட அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை இதுவாகும்.

அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, குர்பாஸ் 73 ஓட்டங்களையும் அவிஷ்க பெனார்டோ 54 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். தம்புள்ளை அவுரா அணியின் பந்துவீச்சில், லஹிரு குமார 2 விக்கெட்டுகளையும் பிரமோத் மதுஷான் மற்றும் துஷான் ஹேமந்த ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 241 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய தம்புள்ளை அவுரா அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 189 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால், லைக்கா ஜப்னா கிங்ஸ் அணி, 51 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, தசுன் சானக 44 ஓட்டங்களையும் பானுக ராஜபக்ஷ 38 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

லைக்கா ஜப்னா கிங்ஸ் அணியின் பந்துவீச்சில், பினுர பெனார்டோ 4 விக்கெட்டுகளையும் சுமிந்த லக்ஷான் 2 விக்கெட்டுகளையும் தில்ஷான் மதுஷங்க மற்றும் தனஞ்சய டி சில்வா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, 35 பந்துகளில் 5 சிக்ஸர்கள் 7 பவுண்டரிகள் அடங்கலாக, 73 ஓட்டங் களைப் பெற்றுக்கொண்ட ரஹமனுல்லா குர்பாஸ் தெரிவு செய்யப்பட்டார். (4)



அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 95 ஆவது ஆண்டு நிறைவையொட்டி வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் மனோகரா சீனியர் பிறீமியர் லீக் தொடரின் ஒரு போட்டி கடந்த 10 ஆம் திகதி மாலை அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் கரவை யுனைட்டட் அணியினருக்கும் குஞ்சம் கிங்ஸ் அணியினருக்கும் இடையில் நடைபெற்றது. ஆட்டத்தின் இறுதியில் 2:2 என இரண்டு அணியினரும் பேற்றுக்களைப் பெற்றுக் கொண்டதால் ஆட்டம் சமனிலையில் நிறைவு பெற்றது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2742

**தர்சன்**

உங்க பொண்ணு கிளி மாதிரின்னு சொல்லி எனக்குக் கட்டி வைச்சீங்க இப்போ அரிவாள் எடுத்து வெட்ட வாறாள்



இது வெட்டுக்கிளி மாப்ளே அப்படித்தான் இருக்கும்

**பிரியா**

இந்தக் குளிரையே நம்மளால தாங்க முடியல



இதுல வெளிநாடு போற ஆசை எல்லாம் நமக்குத் தேவைதானா குமாரு

**நிமல்**



உண்மைகளுக்கு கனம் அதிகம் காற்றில் பரவாது. பொய்களுக்கு கனம் குறைவு காற்றில் பரவிவிடும்.

**சிநேகன்**


நுவரெலியா போகனும் என்று ஆசைப்பட்டோம்



இப்போ நுவரெலியாவே நம்ம ஊருக்கு றிப் வந்திருக்குது போல

**பவிதா**

யாரோ ஒருவர் கஷ்டத்தில் இருக்கும் போது இவரிடம் பேசினால் ஆறுதலா இருக்கும்ன்னு நினைக்கும் இந்த நபராக இருக்க முயற்சி செய்யுங்கள் வாழ்க்கை அழகு.



**சர்மினி**

சிறந்த குதிரையானாலும் சாட்டை அடியிலிருந்து தப்ப முடியாது. அதேபோல் இந்த உலகத்தில் என்ன தான் சிறந்த மனிதனாக இருந்தாலும் குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்பிக்கவே முடியாது.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானம் மூலம் யாழிற்கு வரவுள்ள சுற்றுலாப் பயணிகள்

## சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை அறிவிப்பு



(கொழும்பு)

விமானம் மூலம் சுற்றுலாப் பயணிகளை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வடக்கு புகையிரப் பாதைகள் மூடப்படுவதால், இந்த அறிவிப்பை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை வெளியிட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள புகையிரத பாதைகள் திருத்தப் பணிகளுக்காக மூடப்படுவதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

வடக்கில் புகையிரதப் பாதைகள் சுமார் 6 மாதங்களுக்கு திருத்தம் செய்யப்பட உள்ளதால் யாழ்.குடா நாட்டிற்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

மேலும் அவர், தற்போது நாட்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதுடன், வருகின்ற ஆண்டும் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

இதனால் யாழ்ப்பாணத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கலாம். எனவே புகையிரதங்கள் மட்டுப்படுத்தப்பட்டால், பயணிகள் பாதிக்கப்படுவார்கள்.

ஆகவே சுற்றுலா பயணிகளை விமானம் மூலம் அழைத்து வருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே நாட்டில் சிவில் விமான சேவைகள் குறைவாக உள்ள நிலையில், புகையிரத சேவைகளும் பாதிக்கப்பட்டால் சுற்றுலாத் துறை மேலும் பாதிக்கும் என்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து யாழ்.பலாலி விமான நிலையத்திற்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (நி)


# ஈராண்டு நினைவஞ்சலி

பிறப்பு 15 – 05 – 1917



இறப்பு 05 – 12 – 2020

அமரர். கார்த்திகேசு ஆறுமுகம்

திதி-13.12.2022

எம்மைக் கண் இமை போல் பேணிக் காத்த எமது
அன்புத் தந்தையே! ஈராண்டு பறந்தோடினும் எமது
நினைவுகள் உங்களோடு நின்று போனதுதான் ஏனோ!!
இல்லத்தில் நீங்கள் இல்லாது போயினும் எங்கள்
உள்ளத்தில் என்றும் நீங்காத நினைவாய் வாழ்வீர்கள்!
உங்கள் பிரிவின் வலியை கீழே விழாது தேங்கி நின்ற
எங்களது கண்ணீர்த் துளிகள் உணர்த்தினவே!!
என்றும் உங்கள் நினைவுகளை எங்கள் நெஞ்சம் மறவாது!
எமது கண்ணீர்த்துளிகளை
உங்களது பாதக்கமலத்தில் சமர்ப்பிக்கின்றோம்!

முக்கிய குறிப்பு - 14.12.2022 நாளை புதன்கிழமை கருணையம்பதி சித்தம்பாதியில் அமைந்திருக்கும் குலதெய்வமான வீரபத்திரர் ஆலயத்தில் விசேட அபிசேகமும் அதனைத் தொடர்ந்து அன்னதானமும் நடைபெறும்.

குளிர்ந்தவேல்,
கரணவாய்,
கரவெட்டி.

(13753)

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.


### எழில், சுகந்தி குறுந்திரைப்படங்கள் திரையிடல்

(யாழ்ப்பாணம்)

பல கலைஞர்களின் பங்களிப்புடன் எழில் மற்றும் சுகந்தி குறுந்திரைப்படங்கள் நாளை மறுதினம் வியாழக் கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கில் திரையிடப்படவுள்ளன.

எழில் குறுந் திரைப்படமானது இதுவரை 12 சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு ஆறு விருதுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. (4)


# கண்ணீர் அஞ்சலி



அமரர். செல்வரட்ணம் சறோசா

எமது பாலர் பகல் விடுதியின் ஆசிரியர்
திருமதி. அனுசா அவர்களின்
அன்புத் தாயார். 11.12.2022
அன்று இறைபதமடைந்துள்ளார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்பதுடன்
அவரது இழப்பினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிர்வாகத்தினரும் ,ஆசிரியர்களும் –பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும்,
நீர்வேலி.

(13752)


# இராசிபலன்

13.12.2022
கார்த்திகை 27, செவ்வாய்க்கிழமை
பஞ்சமி முன்னிரவு 07.18 மணிவரை

ஆயிலியம் பின்னிரவு 12.56 மணிவரை
சுபநேரம் -10.50-12.20 மணிவரை
இராகுகாலம்.- 03.20-04.50 மணிவரை

சந்திராஷ்டமம்- பூராடம்,உத்தராடம்

வளவன்

**மேஷம்** அழகுசாதனப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் நலம் காண வேண்டிய நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கடகம்** உங்களைப் பற்றி விமர்சிக்கும் சிலரிடம் எதிர்த்தும் பேசாமல் செல்வீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு பெருமை தரும், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள்.

**துலாம்** செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**மகரம்** அடிப்படை வசதி வாய்ப்புகளை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம்.

**ரிஷபம்** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், விடா முயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், வழிபாட்டினால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், உறவினர் வழியில் உதவிகள் கிடைக்கும்.

**சிம்மம்** தொழில் ரீதியான பயணங்களில் விழிப்புணர்வு அவசியம், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், விருந்தினர்களின் சந்திப்பு இடம் பெறலாம், காரிய அலைச்சல்கள் சற்று கூடும்.

**விருச்சிகம்** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**கும்பம்** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நடைபெறலாம், கூட்டுத் தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், வெளியூர்ப் பயணங்களால் நன்மையுண்டு, திருமண முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு.

**கன்னி** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, பயணங்களில் விழிப்புணர்வு அவசியம்.

**மீனம்** நீண்ட நாட்களாக திட்டமிட்டிருந்த காரியம் இன்று கைகூடும், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வார்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது கவலைதான் உன் மகிழ்ச்சியைத் திருடும் திருடன்.

# விமான சேவை போல் கப்பல் சேவையும் விரைவில்

## அமைச்சர் டக்ளஸ்

**(யாழ்ப்பாணம்)**

**பல்வேறு முயற்சிகளின் பலனாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள பலாலிக்கான விமான சேவையை மக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

கொரோனா பரவல் காரணமாக இடைநிறுத்தப்பட்ட பலாலிக்கான விமான சேவை நேற்று மீண்டும் ஆரம்பமாகியுள்ளமை வடக்கு மாகாண மக்களுக்கு மாத்திரமன்றி கிழக்கு மற்றும் அநுராதபுரம், பொலநறுவை போன்ற வட மத்திய மாகாணங்களுக்கும் நன்மை பயக்கவுள்ளதாகவும் கடற்றொழில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும், "அடிப்படையான வசதிகளுடன் மட்டுப்படுத்தப்பட்டளவு சேவைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

விமான நிலையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை கட்டம் கட்டமாக விஸ்தரிப்பதற்கு தேவையான நகர்வுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட இருக்கின்றது.

இது தொடர்பாக, இந்திய அரசாங்கத்துடன் கலந்துரையாடுவதுடன் அமைச்சரவையிலும் பிரஸ்தாபிக்கவுள்ளேன். இந்நிலையில், மக்கள் சரியான முறையில் இதனைப் பயன்படுத்துவார்களாயின், எதிர்காலத்தில் இந்தியாவிற்கான சேவைகள் விரிவுபடுத்தப்படும் என்பதுடன் ஏனைய நாடுகளில் இருந்தும் சேவையை முன்னெடுப்பதற்கும் விமான நிறுவனங்கள் முன்வரும்.

இதன்மூலம், எமது பிரதேசத்தின் சுற்றாலாத்துறை வளர்ச்சியடைவதுடன் ஏற்றுமதி, இறக்குமதி செயற்பாடுகளுக்கான நேரடி வாசலாகவும் பலாலி விமான நிலையம் செயற்படும். இது எமது மக்களை பொருளாதார ரீதியில் வலுப்படுத்தும்"



என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், காங்கேசன் துறைக்கும் பாண்டிச்சேரி மற்றும் காரைக்கால் போன்றவற்றிற்கும் இடையிலான சரக்கு படகு சேவையை ஆரம்பிக்கும் தன்னுடைய முயற்சிகளும் விரைவில் சாத்தியமாகும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-33)

# வெற்றிலைக்கேணியில் வெடிபொருட்கள் மீட்பு

(அராலி)

யாழ்ப்பாணம்-வெற்றிலைக்கேணி, ஜே/432 கிராம உத்தியோகத்தர் பிரிவில் நேற்று வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

குறித்த பகுதியில் தடாகம் ஒன்றிற்கு அருகில் வெடிபொருட்கள் இருப்பதை மீனவர் ஒருவர் அவதானித்த நிலையில் வெற்றிலைக்கேணி இராணுவ அதிகாரிகளுக்கு அதனை தெரியப்படுத்தினார்.

அங்கு 60 MM ரக மோட்டார் குண்டுகள் 10 கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றினை மீட்பதற்



கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (4-6-104)

# நிலாவரைப் பகுதியில் கசிப்புடன் இருவர் கைது

(அராலி)

அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நிலாவரை பகுதியில் வைத்து இரண்டு சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவினரின் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே இந்த கைது முன்னெடுக்கப்பட்டது. இதன்போது அவர்களிடமிருந்து தலா 1500 மில்லிமீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் புன்னாலைக்கட்டுவன் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்கள் வீதியில் செல்லும்போது கசிப்பினை உடைமையில் வைத்திருந்தார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும், சான்றுப் பொருட்களுடன் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டனர். அவர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-104)

# போதைப் பாவனைக்கு எதிராக தீவகத்தில் போராட்டம்



(அராலி)

போதைப் பாவனைக்கு எதிராக தீவக இளைஞர்களால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வேலணை பிரதேசத்தில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இரு பிரிவாக இடம்பெற்ற இப்போராட்டத்தில் ஒரு பிரிவினர் மண்கும்பான் சந்தியிலிருந்தும் இன்னொரு பிரிவினர் வங்களாவடி சந்தியிலிருந்தும் போராட்டத்தை ஆரம்பித்து சாட்டி திருத்தலத்தை நோக்கி பதாகைகளை ஏந்தியவாறு பவனியாக வந்து போதைப்பொருளுக்கெதிராக குரல் கொடுத்தனர். (4-6-30)

# ஆயுதங்களுடன் பிரதேச சபை உறுப்பினர் கைது

(அராலி)

பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் நேற்று வாள்கள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே குறித்த சந்தேகநபர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மீட்கப்பட்ட ஆயுதங்களுடன் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டார். சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-104)

## கொழும்பு மாநகர சபையால்

# மானிப்பாய் பிரதேச சபைக்கு 7 வாகனங்கள் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

தென்பகுதியில் உள்ள உள்ளூராட்சிமன்றங்களுக்கு இடையே நட்புறவை ஏற்படுத்தும் வகையில் மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளர், பிரதேச சபை உறுப்பினர்கள் கடந்த வருட இறுதியில் கொழும்பு மாநகர சபைக்கான நட்புறவு பயணத்தினை மேற்கொண்டனர்.

அதன் விளைவாக இவ்வருட ஆரம்பத்தில் கொழும்பு மாநகர முதல்வர் ரோசி சேனநாயக்க தலைமையில் கொழும்பு மாநகரசபை உறுப்பினர்கள் யாழிற்கு விஜயத்தினை மேற்கொண்டனர்.

இதன்போது வழங்கிய வாக்குறுதியின்படி, கொழும்பு மாநகர சபையில் காணப்பட்ட, மீள் பாவனைக்கு உட்படுத்தக் கூடிய நிலையில் இருந்த ஏழு வாகனங்கள் கொழும்பு மாநகர சபையால் உரிய அனுமதிகள் பெறப்பட்டு திருத்தப்பட்டு, கொழும்பு மாநகரசபையின் அழைப்பின் பேரில் அங்கு விஜயம் செய்த மானிப்பாய் பிரதேச சபை தவிசாளர் தலைமையிலான உறுப்பினர் குழாமிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன. (4-6-33-104)

# இலவச உர விநியோகம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கமநல சேவை நிலைய எல்லைக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பில் 60 பரப்பு மற்றும் அதற்கு உட்பட்ட வயல் நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கான இலவச உரம் வழங்குதல் நாளை புதன் கிழமை இடம்பெறவிருப்பதாக கமக்கார அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த இலவச உரத்தை சாதாரண விவசாயிகளுடன் 41,200 ரூபாவுக்கு உட்பட்ட மாத வருமானத்தை ஈட்டும் அரசாங்க உத்தியோக மற்றும் ஓய்வூதியர்களான விவசாயிகளும் பெறத் தகுதியுடையவர்களாக கருதப்படுவர்.

எனவே குறித்த தினத்தில் உரிய விவசாயிகள் தேசிய அடையாள அட்டை மற்றும் குடும்ப அட்டையுடன் சாவகச்சேரி கமநல சேவை நிலையத்திற்கு வந்து இலவசமாக 50 கிலோகிராம் உரத்தினைப் பெற்றுக்கொள்ளலாம் என மேலும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (4-6-30)

# மாற்றுவலுவுடையோர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மாற்று வலுவுடையோர் தினம் நாளை புதன் கிழமை காலை 9 மணியளவில் யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஸ்ணன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் [illegible] கலந்து கொள்ளவுள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளில்

## 50 சதவீதம் பேருக்கு ஊட்டச்சத்து குறைபாடு

**(கொழும்பு)**

**நாட்டில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 50 சதவீதம் பேர் உணவுப் பணவீக்கம் காரணமாக ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

குறித்த தகவலை குடும்ப சுகாதாரப் பணியகத்தின் ஊட்டச்சத்து குறித்த அறிக்கை கூறுவதாக பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பான குறுகிய மற்றும் நடுத்தர கால திட்டங்களைக் கண்டறியும் தேசிய சட்டமன்ற துணைக் குழுவின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், உணவுப் பற்றாக்குறையால் கர்ப்பிணித் தாய்மார்களின் உடல் நிறை குறியீட்டெண் மதிப்பு மிகவும் குறைவாக இருப்பதும் தெரியவந்தது.

கடந்த பாராளுமன்ற உரையில் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் குடும்ப சுகாதாரப் பணியாளர்கள் மட்டத்தில் முன்னுரிமைகளை இனங்கண்டு இந்த சுகாதாரப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென குறித்த குழுவின் தலைவர் பாடலி சம்பிக்க ரணவக்க தெரிவித்திருந்தார். (நி)

# சமுர்த்தி பயனாளிகள் உள்ளிட்ட அரச உதவிகள் பெறுவோர் தொடர்பில் ஆய்வு

## சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

(கொழும்பு)

சமுர்த்தி பயனாளர்கள் உள்ளிட்ட அரச உதவிகளை பெறுவோர் தொடர்பில் ஆய்வொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம், சமூக நலன்புரி சபை ஆகியவற்றுடன் இணைந்து இந்த ஆய்வு முன்னெடுக்கப்படுவதாக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி குறிப்பிட்டார்.

உதவிகள் கிடைக்க வேண்டிய குடும்பங்கள் புறக்கணிக்கப்பட்டும் தகுதியற்றவர்களுக்கு அரச உதவிகள் கிடைப்பதாகவும் எழுந்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு அமைய, பயனாளர்களின் பட்டியலை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

அதற்கான பதிவுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும் அதற்கமைய, செம்மைப்படுத்தப்பட்ட புதிய ஆவணத்திற்கு அமைய 35 இலட்சம் குடும்பங்கள் அரச உதவி பெறுவதற்கு தகுதி பெற்றுள்ளன எனவும் அவர் தெரிவித்தார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1982 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 3<br>கி.பா: சூரி 1 செவ் 3 இல் உயரம்: 160 cm<br>தகைமை/தொழில்: தபாலக ஊழியர்<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/10431 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>கி.பா: சூரி. செவ் 1 இல்<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில்:BSc (தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு:நிரந்தர தொழில்<br>தொ.இ:G/11544 |
| பிறப்பு:1991 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 1<br>கி.பா:13 ½சூரி.செவ் 10 இல் உயரம் :167 cm<br>தகைமை/தொழில்: AL (பாடசாலை அலுவலக ஊழியர்)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் மட்டும்<br>தொ.இ: B/10441 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா:40 சூரி .செவ் 3 இல்<br>உயரம்:4' 11"<br>தகைமை/தொழில்:HNDA,DO<br>எதிர்பார்ப்பு:அரச. தனியார் தொழில்<br>தொ.இ:G/11545 |
| பிறப்பு:1992 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>கி.பா:சூரி 8 செவ் 4 இல் உயரம்: 6' 1"<br>தகைமை/தொழில்:பட்டதாரி ரெலிக்கோம் Engineer<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/10445 | பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்:மூலம் 4<br>கி.பா: 33 சூரி 10 செவ் 6 இல்<br>உயரம்:5' 7"<br>தகைமை/தொழில்:BSc,MSc(அவுஸ்திரேலியா)<br>எதிர்பார்ப்பு:அவுஸ்திரேலியா மட்டும்<br>தொ.இ: G/11547 |
| பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா:சூரி 12 செவ் 10 இல்<br>உயரம்: 5' 8"<br>தகைமை/தொழில்:A/L கடை (தனியார்)<br>எதிர்பார்ப்பு: படித்தபெண் வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/10449 | பிறப்பு: 1989 கிறிஸ்தவம் RC<br>நட்சத்திரம்:பரணி 1<br>கி.பா: சூரி 8 செவ் 11 இல்<br>உயரம்:5' 2"<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/11554 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



சிவ சிவ

தென்னாடு

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சைவசித்தாந்தத்துறையும் தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தின் சைவ மாணவர் சபையும்

இணைந்து நடாத்தும்

# மார்கழிப் பெருவிழா - 2022

திருமுறையே சைவநெறிக் கருவூலம் தென்தமிழின் தேன்பாகு ஆகும்
திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம் வருந்த எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய் மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்

**மார்கழித் திங்கள் 10ஆம் நாள் (டிசம்பர் 25) ஞாயிற்றுக்கிழமை**

காலை 8 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பரமேசுவரர் திருக்கோயில் வழி பாட்டுடனும் தேவாரத் திருமுறை, நால்வர் எழுந்தருளலுடன் அரங்கங்கள் ஆரம்பமாகும்.

**காலை அரங்கம் - தில்லைக்கூத்தன் திருவம்பலம்**
(காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை)

- திருவிளக்கேற்றலும் அம்பலவாணர் அருள்வழிபாடும்
- அருள் உரை - தவத்திரு. **மீனாட்சி சுந்தரம் தம்பிரான் சுவாமிகள்** (தருமை ஆதீன திருச்சி மௌன மட மற்றும் இலங்கை திருக்கேதீச்சர மட தம்பிரான் சுவாமிகள்)
- தொடக்கவுரை - கலாநிதி **பொன்னுத்துரை சந்திரசேகரம்** (தலைவர் - சைவ சித்தாந்தத் துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
- வாழ்த்துரை - பேராசிரியர். **சி.சிறிசற்குணராசா** (துணைவேந்தர்-யாழ். பல்கலைக்கழகம்)
- திருமுறை விண்ணப்பம் - குமாரவயலூர் திருமுறைக்கலாநிதி. முனைவர். **திருஞான பாலச்சந்திரன் ஓதுவார்** (தேவார உதவிப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)
- சிறப்புரை - தலைப்பு - **"அண்ணலார் உளர் அஞ்சுவது என்னுக்கே"** வழங்குபவர் - தருமை ஆதீனப்புலவர், திருமுறைக்களஞ்சியம், சிவத்திரு. **எம்.கே. பிரபாகரமூர்த்தி** அவர்கள்
- கௌரவிப்பு நிகழ்வு - கொடையாளர்களை சிறப்புச் செய்யும் நிகழ்வு **அடியார் தமக்கு அமுது செய்விக்கும் நிகழ்வு - 12.30 முதல் 1.30 மணி வரை**

**மாலை அரங்கம் - திருவாதவூரடிகள் திருவம்பலம்**
**(1.30 மணி முதல் 5.30 மணி வரை)**

- அருள் உரை - தவத்திரு. **அகத்தியர் அடிகளார்** (தென் கயிலை ஆதீன குருமுதல்வர்)
- தொடக்க உரை - சிவத்திரு. **செந்தமிழாதன்** (நிர்வாகச் செயலாளர் - சைவ மாணவர் சபை)
- வாழ்த்துரை - சிவத்திரு. **நல்லையா விஜயசுந்தரம்** (தலைமை ஆசிரியர் - வலம்புரி பத்திரிகை)
- திருமுறை விண்ணப்பம் - குமாரவயலூர் திருமுறைக்கலாநிதி. முனைவர். **திருஞான பாலச்சந்திரன் ஓதுவார்** (தேவார உதவிப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)
- சிறப்புரை - தலைப்பு - **"எது எமைப் பணிகொளுமாறு அது கேட்போம்"** வழங்குபவர் - தருமை ஆதீனப்புலவர், திருமுறைக்களஞ்சியம், சிவத்திரு.**எம்.கே.பிரபாகரமூர்த்தி** அவர்கள்
- திருவாசக கட்டுரைப் போட்டிக்கான பரிசில் வழங்கல்
- நன்றியுரை - சிவத்திரு. **வனராஜ் சசிராஜ்** (பொதுச் செயலாளர் - சைவ மாணவர் சபை)

நிகழ்ச்சி முன்வைப்பு - சிவத்திரு. **செந்தமிழாதன்** மற்றும் சிவத்திரு. **பாலுசாமி சிவமாதவன்** (ஆசிரியர்கள் - தென்னாடு திங்கள் இதழ்)

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"**
திருச்சிற்றம்பலம்

**தென்னாடு செந்தமிழாகம சிவமடம்,**
**கொக்குவில், யாழ்ப்பாணம். 021 221 2739 / 070 770 1111**

(C-5489)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## பாகம் - 1

### காவியத் தொடர் 50





"ஆலிலையின் மேல் பள்ளி கொண்ட பெருமான் யார் என்பது தெரியாதா? அந்த மகாவிஷ்ணுவின் அம்சத்துடன் இவள் வயிற்றில் ஒரு பிள்ளை பிறப்பான். இவளுடைய நாயகனுக்காவது பல இடைஞ்சல்கள், தடங்கல்கள், அபாயங்கள், கண்டங்கள் எல்லாம் உண்டு. ஆனால் இந்தப் பெண்ணின் வயிற்றில் அவதரிக்கப் போகும் குமாரனுக்குத் தடங்கல் என்பதே கிடையாது.

அவன் நினைத்ததெல்லாம் கைகூடும்; எடுத்ததெல்லாம் நிறைவேறும். அவன் தொட்டதெல்லாம் பொன்னாகும்; அவன் கால் வைத்த இடமெல்லாம் அவனுடைய ஆட்சிக்கு உள்ளாகும் அவன் கண்ணால் பார்த்த இடமெல்லாம் புலிக்கொடி பறக்கும். இவளுடைய குமாரன் நடத்திச் செல்லும் சைன்யங்கள் பொன்னி நதியின் புது வெள்ளத்தைப் போல் எங்கும் தங்குதடை இன்றிச் செல்லும். ஜயலக்ஷ்மி அவனுக்குக் கைகட்டி நின்று சேவகம் புரிவாள். அவன் பிறந்த நாட்டின் புகழ் மூவுலகமும் பரவும். அவன் பிறந்த குலத்தின் கீர்த்தி உலகம் உள்ள அளவும் நின்று நிலவும்!"

இந்தத் தேவியை அடையும் நாயகன் எல்லாத் தடைகளையும் மீறி மகோன்னத பதவியை அடைவான்.

இதைவிட முக்கியமான செய்தி ஒன்று உண்டு தாயே! நான் வயதானவன் ஆகையால் உள்ளதை ஒளியாமல் விட்டுச் சொல்கிறேன். இந்தப் பெண்ணின் வயிற்றை நீங்கள் ஒருநாள் பாருங்கள். அதில் ஆலிலையின் ரேகைகள் இல்லாவிட்டால் நான் இந்த சோதிடத் தொழிலையே விட்டுவிடுகிறேன்"

"ஆலிலையின் ரேகையில் என்ன விசேடம் சோதிடரே?"

இவ்வாறு சோதிடர் ஆவேசம் வந்தவர் போல் சொல்லி வந்தபோது குந்தவை தேவி அவருடைய முகத்தையே பார்த்துக் கொண்டு, அவர் கூறிய வார்த்தைகளை ஒன்று விடாமல் விழுங்குபவள் போல் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"அக்கா!" என்ற தீனமான குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். "எனக்கு என்னமோ செய்கிறது!" என்று மேலும் தீனமாகக் கூறினாள் வானதி; திடீரென்று மயங்கித் தரையில் சாய்ந்தாள்.

"சோதிடரே! சீக்கிரம் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வாருங்கள்!" என்று குந்தவை சொல்லிவிட்டு, வானதியைத் தூக்கி மடியில் போட்டுக் கொண்டாள். சோதிடர் தண்ணீர் கொண்டு வந்தார்; குந்தவை தண்ணீரை வாங்கி வானதியின் முகத்தில் தெளித்தாள்.

"ஒன்றும் நேராது, அம்மா! கவலைப் படாதீர்கள்" என்றார் சோதிடர். "ஒரு கவலையும் இல்லை; இவளுக்கு இது வழக்கம். இந்த மாதிரி இது வரையில் ஐந்தாறு தடவை ஆகிவிட்டது! சற்றுப் போனால் கண் விழித்து எழுந்திருப்பாள், எழுந்ததும் இது பூலோகமா, கைலாசமா என்று கேட்பாள்!" என்றாள் குந்தவை.

பிறகு சிறிது மெல்லிய குரலில், "சோதிடரே! முக்கியமாக ஒன்று கேட்பதற்காகவே உங்களிடம் வந்தேன். நாடு நகரங்களிலே சில காலமாக ஜனங்கள் ஏதேதோ பேசிக் கொள்கிறார்களாமே? வானத்தில் சில நாளாக வால் நட்சத்திரம் தோன்றுகிறதே? இதற்கெல்லாம் உண்மையில் ஏதேனும் பொருள் உண்டா? இராஜ்யத்துக்கு ஏதாவது ஆபத்து உண்டா? மாறுதல், குழப்பம் ஏதேனும் ஏற்படுமா?" என்று இளையபிராட்டி கேட்டாள்.

"அதை மட்டும் என்னைக் கேட்காதீர்கள், தாயே! தேசங்கள், இராஜ்யங்கள், இராஜாங்க நிகழ்ச்சிகள் இவற்றுக்கெல்லாம் ஜாதகமும் கிடையாது; சோதிடமும் சொல்ல முடியாது. நான் பயின்ற வித்தையில் அதெல்லாம் வரவில்லை.

ஞானிகளும் ரிஷிகளும் மகான்களும் யோகிகளும் ஒருவேளை ஞான திருஷ்டியில் பார்த்துச் சொல்லலாம்.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## வேடம் எது?

(நேற்றைய தொடர்ச்சி)

ஓராண்டிற்குப் பின் நீ எங்கிருந்தாலும் நான் வந்து உன்னைக் காண்கிறேன் என்றார்.

சுந்தரசேனனும் அவ்வாறே செய்வதாகக் கூறவே யோகானந்தர் அவனிடம் விடை பெற்றுக் கொண்டு சென்றார். அப்போது முதல் சுந்தரசேனன் வாரம் ஒருமுறை மாறுவேடத்தில் சென்று மக்களின் கஷ்டநஷ்டங்களை நேரில் கண்டறியலானான்.

அவன் தான் கண்ட துயர்களை எல்லாம் போக்கி மக்கள் நலனில் கவனம் செலுத்தி வந்தான்.

இப்படியெல்லாம் இருந்தும் அவன் தன் சுகபோகங்களை விட்டுவிடவில்லை. பாடகிகள், நடனமாதுகள் புடைசூழ வாரத்தில ஆறு நாட்களைக் கழித்தான். இப்படியாக ஓராண்டு கழிந்தது. ஒருநாள் திடீரென யோகானந்தர் அரண்மனைக்குள் வந்து விட்டார். அப்போது சுந்தரசேனன் தன் சயன அறையில் பட்டு மெத்தையில் படுத்து இசையையும் நடனத்தையும் ரசித்துக் கொண்டிருந்தான்.

அவன் யோகானந்தரைக் கண்டதும் பரபரப்புடன் எழுந்து வந்து அவரது கால்களில் விழுந்து வணங்கினான்.

யோகானந்தரோ முகத்தைச் சுளித்தவாறே "இந்த ஓராண்டு காலத்தில் உன் நாட்டில் குறிப்பிடத்தக்க மாறுதல் எதுவும் ஏற்படவில்லையே. நான் கூறியபடி நடந்தாயா?" என்று கேட்டார்.

சுந்தரசேனனும் "நடந்தேன். மாறுவேடத்தில் நேற்றுக் கூட ஒரு ஏழையின் வீட்டிற்குப் போயிருந்தேன். அவன் போதிய மருத்துவ உதவி இல்லாமல் திணறிக் கொண்டிருந்தான். அவனுக்கு வைத்திய உதவி கிடைக்க ஏற்பாடு செய்து விட்டு வந்தேன். அச்செலவை நானே ஏற்றேன்" என்றான்.

யோகானந்தரும் "அது சரி, நீ மாறுவேடத்தில் இருக்கும்போது மக்கள் நலனைத்தான் கவனிக்க வேண்டும் என்று நான் உன்னிடம் சொன்னது நினைவில் இருக்கிறதா? அதன்படி நீ நடப்பதாகத் தெரியவில்லையே" என்றார். சுந்தரசேனனோ "அதென்ன அப்படிக் கூறுகிறீர்கள்! மாறுவேடத்தில் நான் ஒரு ஏழையின் வீட்டிற்குப் போய் அவனுக்கு எவ்வித செலவும் இல்லாமல் வைத்திய உதவி கிடைக்குமாறு செய்திருக்கிறேனே. இது நீங்கள் கூறியது போல நடந்து கொண்டது போலத்தானே!" என்று கேட்டான்.



யோனாந்தரும் "அது எனக்குத் தெரிகிறது. நீ மாறுவேடத்தில் உள்ளது பற்றித்தான் கேட்கிறேன்" எனவே சுந்தரசேனன் ஆச்சரியப்பட்டு "ஆமாம் அன்று மாறுவேடத்தில் தான் இருந்தேன்" என்றான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றோர் கெட்டாலும் அவர்தம் உயர்ந்த பண்புகள் அழியா.

– லாங் ஃபெல்லோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் சிவில் அமைப்புக்களின் கட்டமைப்பு ஒருபோதும் சாத்தியமாகாது

தமிழினத்துக்கு எதிராகச் செயற்பட்டவர்களை இனங்கண்டு அவர்களை அடையாளப்படுத்திய விடுதலைப் புலிகளையே ஏமாற்றி உள்ளித்தைலம் வைத்தவர்கள் இருக்கிறார்கள் எனில், எங்கள் நிலைமை எத்தன்மையதென்பதை நாம் புரிந்து கொள்வதில் கடினமிருக்காது.

விடுதலைப் புலிகள் அமைப்பை நேசிப்பது போல நடித்து இங்கு தலையும் அங்கு வாலும் காட்டியவர்களை விடுதலைப் புலிகளாலேயே இனங்காண முடியவில்லை.

உண்மையில் விடுதலைப் புலிகளின் போராட்டம் தோல்வியில் முடிந்தமைக்கு புலிகளை ஆதரிப்பதாகக் காட்டி தங்கள் நலனைப் பாதுகாத்தவர்களே மூலகாரணம் எனலாம்.

இவ்வாறானதொரு பாதகச் செயலை எந்தவித மனக்கிலேசமுமின்றி செய்யக் கூடியவர்கள் இருக்கும்வரை எங்கள் தமிழ் இனத்துக்கு விடிவும் இல்லை விமோசனமும் இல்லை.

விடுதலைப் புலிகள் என்ற அமைப்பு முடிவுக்கு வந்தபோது தமிழ் மக்களின் எதிர்காலத்துக்கான தீர்மானங்கள், வியூகங்கள், சர்வதேச சமூகத்துடனான சந்திப்புகள் என்பவற்றைக் கையாள்வதற்கு அரசியல் சார்பற்ற புத்திஜீவிகள், இனப்பற்றாளர்கள், துறைசார் நிபுணத்துவமுடையவர்கள் மற்றும் எம் இனம் சார்ந்து சிந்திக்கவல்லவர்கள் அடங்கியதான சிவில் அமைப்பு உருவாகி இருக்க வேண்டும் – உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக தேர்தல் அரசியலை இலக்காகக் கொண்ட தமிழ் அரசியல் வாதிகளின் கைகளில் தமிழர்களின் எதிர்காலமும் தமிழர்களின் உரிமைகள் பற்றி முடிவெடுக்கின்ற அதிகாரமும் சென்றடைந்தது.

இதுவே எங்கள் இனத்தின் கந்தறு நிலைக்குக் வழிகோலிற்று.

இதை நாம் கூறும்போது, தமிழர்களுக்கான அரசியல் களத்தை ஒதுக்கிவிட்டு, சிவில் கட்டமைப்பின் மூலம் தமிழ் மக்களின் அபிலாசைகளை அடைய முடியுமா? என்ற கேள்வி எழும்.

அவ்வாறானதொரு கேள்வி எழுந்தால், அதற்கான பதில் இல்லை என்பதாகவே இருக்கும்.

ஆனால் இங்கு நாம் கூறவருவது தமிழ் இனத்தின் பால் அர்ப்பணிப்புக் கொண்ட சிவில் கட்டமைப்பின் வழிகாட்டலில் இயங்கக்கூடியதான அரசியல் தரப்பு இருக்க வேண்டும் என்பதுதான்.

அவ்வாறானதொரு அரசியல் தரப்பு இருக்குமாயின், அங்கு தேர்தலை நோக்கிய அரசியலுக்கு இடமில்லாமல் போகும்.

ஒற்றுமையும் ஒரே கருத்தும் அதற்கான முனைப்பும் தானாக ஏற்படும்.

என்ன செய்வது காலத்தை தவறவிட்டு விட்டோம். காலமும் எங்களை தள்ளிவிட்டது.

இனி எங்கள் மண்ணில் பரவிக்கிடக்கும் பொய்மையாளர்கள் தங்களைப் பாடவேண்டும் என்று எண்ணுவர்.

தங்களைப் பாடாவிட்டால் – உரிய ஆசனம் வழங்க மறுத்தால், அவர்கள் எந்தச் சிவில் அமைப்பையும் தள்ளிவிழுத்துவர்.

உண்மை. காலம் கடந்தேனும் உன்னத நோக்கோடு உருவாகிய தமிழ் மக்கள் பேரவைக்கு நடந்ததும் இதுவே.

ஆக, எந்தப் பொது அமைப்பை உருவாக்கினாலும் அந்தப் பொது அமைப்பில் தங்களுக்கு ஆசனம் இல்லை என்று நினைக்கும் பொய்மையாளர்கள் அதை வெட்டி வீழ்த்துவர். இது சர்வ நிச்சயம்.

# யாழ்.பல்கலை முகாமைத்துவ பீடத்தின் தொழிற்சந்தை நிகழ்வு நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் தொழிற்சந்தை நிகழ்வு நாளை 14 ஆம் திகதி, புதன் கிழமை காலை 9 மணி முதல் கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கில் அமைந்துள்ள முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீட வளாகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மனிதவள முகாமைத்துவத் துறையின் 'AHEAD'செயற்றிட்டத்தின் கீழ், தொழிற்றுறைத் தொடர்பு மையம் மற்றும் தொழில் வழிகாட்டல் அலகு ஆகியவை இணைந்து நடத்தும் இந்தத் தொழில் வாய்ப்பு சந்தை 2022 க்கான சகல ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில் இத் தொழில்வாய்ப்பு சந்தையின் பிரதான நோக்கமாக அமைவது நான்காம் வருட இரண்டாம் அரையாண்டு மாணவர்களுக்கான பயிற்சி வாய்ப்பைப் (Internship Opportunities) பெற்றுக் கொடுப்பதாகும்.

இந்தத் தொழில் வாய்ப்புச் சந்தையில் கணக்கியல், நிதியியல், மனிதவள, சந்தைப்படுத்தல், வணிகத் தொழில்நுட்பம், தொடர்பாடல் மற்றும் ஆடை உற்பத்திகளில் ஈடுபடும் சுமார் 20 தொழில் வழங்கும் நிறுவனங்கள் கலந்து கொள்ளவுள்ளதுடன், சுமார் 500 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு தமது தொழில் வாய்ப்புகள் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது எனத் தெரிவித்தார். (4,33)

## அனியூரிசம் சிகிச்சை யாழ்.போதனாவில் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் முதல் முறையாக மேற்கொள்ளப்பட்ட மூளையில் ஏற்படும் அனியூரிசம் (Brain aneurysm) எனப்படும் நோயை சீர்செய்யும் (Endovascular Embolization) சிகிச்சை மூலம் தாயொருவர் நலம் பெற்றுள்ளார்.

கொழும்பு தேசிய மருத்துவமனையிலிருந்து வந்திருந்த வைத்திய நிபுணர்களின் பிரசன்னத்துடன் இதனை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளனர். வெற்றிகரமாக சிகிச்சையை மேற்கொண்ட மருத்துவ நிபுணர்கள் மற்றும் மருத்துவமனையின் பணிப்பாளர் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள், சுகாதார உதவியாளர்கள் அனைவருக்கும் பலரும் தமது பாராட்டுக்களை தெரிவித்து வருகின்றனர். (4,104)

## நெடுந்தீவில் கைது செய்யப்பட்ட 24 இந்திய மீனவர்களும் விடுதலை

யாழ்ப்பாணம் நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்த 24 இந்திய மீனவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதவானால் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட தலா ஒன்றரை வருடங்கள் சிறைத் தண்டனை என்ற நிபந்தனையில் விடுதலை செய்யப்பட்டனர்.

ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதவான் செ.கஜநிதிபாலன் முன்னிலையில் இதுதொடர்பான வழக்கு நேற்று திங்கட் கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே 24 மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

பறிமுதல் செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் ஐந்து படகுகளைத் தொடர்ந்தும் தடுத்து வைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டதுடன் குறித்த படகுகளுக்கான உரிமை கோரல் வழக்கினை எதிர் வரும் மார்ச் மாதம்-24 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறும் உத்தரவு பிறப்பித்தார். (ம-7,33)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் கிழமை. காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** ஜீவன் அரிசி ஆலை, சிஜன் அரிசி ஆலை-காத்தான் கோட்டம், ஆசிக்குளம், மறக்கறம் பளை-கணேசபுரம், ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** இறால் பண்ணை, பள்ளமடு, நெடுங்கடல் மொபிட்டல் கோபுரம் கண்ணாட்டி ஆகிய பிரதேசங்களிலும் மின் சாரம் தடைப் படும்.

## இறந்த கால்நடைகளை உரிய முறையில் அடக்கம் செய்யுங்கள்

### வடக்கு ஆளுநர்

(அராலி)

வடமாகாணத்தில் காலநிலை மாற்றத்தால் உயிரிழந்த கால்நடைகளை உரிய முறையில் அடக்கம் செய்வதனை உறுதிப்படுத்துமாறு வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

அண்மைய நாட்களில் வெப்பநிலையில் ஏற்பட்ட திடீர் வீழ்ச்சி மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டால் பல கால்நடைகள் வடக்கு மாகாணத்தில் இறந்துள்ளன.

இறந்த கால்நடைகளை அதற்குரிய மரியாதையை வழங்கி உரிய முறையில் அடக்கம் செய்வதினை உறுதிப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளேன்.

ஆகவே எதிர்காலத்தில் இவ்வாறான கால நிலை மாற்றங்களுக்கு ஈடு கொடுக்கக் கூடிய வகையில் கால்நடை வளர்ப்பாளர்கள் தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என அவர்மேலும் தெரிவித்தார். (4-6-104)

## தும்பளையில் கசிப்புடன் பொலிஸாரால் ஒருவர் கைது

(கரணவாய்)

பருத்தித்துறை பொலிஸின் குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பின் போது 5,250 மில்லி லீற்றர் கசிப்பு மீட்க்கப்ப்பட்டுள்ளதுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தும்பளைப் பகுதியில் கசிப்பு விற்பனை இடம் பெறுவதாக கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலை அடுத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வீடு ஒன்றை பொலிஸார் சுற்றி வளைத்தனர். இதன்போது 5,250 மில்லி லீற்றர் கசிப்பு 40 சொப்பின் பைகளில் கட்டப்பட்ட நிலையிலும் மீட்கப்பட்டுள்ளது. (ம-7,60)

## இந்தியாவிலிருந்து தப்பிவந்த இலங்கையை சேர்ந்த இருவர் வேலணை கடற்கரையில் கைது

இந்தியா மண்டபம் முகாமில் இருந்து தப்பி வந்த இலங்கையைச் சேர்ந்த இருவர் நேற்று வேலணை கடற்கரையில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.


குறித்த நபர்கள் இருவரும் இலங்கையில் இருந்து சென்று இந்தியா மண்டபம் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்று காலை இருவரும் அங்கிருந்து தப்பித்து கடல் மார்க்கமாக மீண்டும் இலங்கையை வந்தடைந்தனர். இதன்போது இலங்கை கடற்படையினரால் அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கடற்படையினரின் விசாரணைகளின் பின்னர் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டனர். அவர்கள் இருவரையும் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தபால் ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு
# பொதுமக்கள் அசௌகரியம்




(குருமன்காடு)

தபால் ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் மாலை தொடக்கம் நேற்று நள்ளிரவு வரை அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

மத்திய அஞ்சல் பரிவர்த்தனை நிலையம், தபால் காரியாலயங்கள் மற்றும் நிர்வாக காரியாலயங்களில் எந்தவிதமான கண்காணிப்புமின்றி மேலதிக கொடுப்பனவுக் குறைப்பு, தபால் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் இடமாற்ற சபையின் மேல்முறையீட்டு சபையில் நடவடிக்கையிலிருந்து தொழிற்சங்கத்தினை நீக்கியமை, தபால் கட்டணம் மறுசீரமைப்பு தொடர்பில் பல்வேறுபட்ட விமர்சனங்களுக்கு ஆளாகி தபால் திணைக்களத்தின் வியாபார நடவடிக்கைகள் வீழ்ச்சியடைவதனை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை போன்ற பல விடயங்களுக்கு எவ்வித தீர்வும் எட்டாப்படாமைக்கு எதிர்ப்பினை வெளிப்படுத்தும் முகமாக இப்பணிப்புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன் காரணமாக கடிதங்கள், பொதிகள் அனுப்ப வந்த மக்கள் மற்றும் முதியோர் கொடுப்பனவு பெறுவதற்கு வருகை தந்த முதியவர்கள் எனப் பலரும் ஏமாற்றங்களுடன் திரும்பிச் சென்றிருந்தனர். (4-6-250)

## காலநிலை மாற்றத்தால்
# விவசாய செய்கையில் நோய்த்தாக்கம் அதிகரிப்பு



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் காலநிலை மாற்றம் காரணமாக பெரும்போக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் பயிர்களில் நோய்த்தாக்கம் அதிகரித்து காணப்படுவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

நோய்த் தாக்கம் காரணமாக கிருமி நாசினிகளை அதிக விலை கொடுத்தே பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அப்படி அதிக விலை கொடுத்து பெறப்பட்ட கிருமிநாசினிகளை பயிர்களுக்கு தெளித்த போதிலும் உரிய பயனைப் பெற முடியாது போய் உள்ளது.

தொடர்ச்சியாக வயல் நிலங்களில் பங்கஸ் நோய்த்தாக்கம் எரிபந்தம் என பல்வேறு வகையான நோய்த் தாக்கங்கள் ஏற்படுகின்றன.

இதனால் விவசாயிகள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (4-6-316)

# யுத்த கால பதுங்கு குழிகள்
## அழிக்கப்படாததால் தேங்கி நிற்கும் வெள்ளம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு கரைதுறைபற்றின் மாத்தளன், அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம் ஆகிய பகுதிகளில் தேங்கி உள்ள மழை வெள்ளத்தினை அகற்றுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அக் கிராமங்களின் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு மேற்படி கிராமங்கள் போர் நடைபெற்ற காலத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது உயிர்களை காப்பாற்றிக் கொள்ள பெருமளவு பதுங்கு குழிகளை இக்கிராமங்களில் அமைத்தனர். போரில் ஈடுபட்டவர்கள் நீண்ட மண் அணைகளை இப்பகுதிகளில் அமைத்திருந்தனர்.

ஆனால் இவை பின்னர் பெருமளவில் அகற்றப்படாததன் காரணமாக மழைகாலத்தில் இப்பகுதியில் பெருமளவு வெள்ளம் வழிந்தோட முடியாமல் இருப்பதன் காரணமாக இப் பகுதியில் வாழ்கின்ற மக்கள் தொற்று நோய் அபாயங்களை எதிர்கொண்டுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், கரைதுறைபற்று பிரதேச செயலகம் என்பவற்றில் நடைபெறும் கூட்டங்களில் தொடர்ச்சியாக இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது.

பதுங்கு குழிகளையும் மண் அணைகளையும் முழுமையாக அழித்து வெள்ளநீர் வழிந்தோடுவதற்கான வழிகளை அதிகாரிகள் உருவாக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (நி)

# கவிதை நூல் வெளியீட்டு விழா

(திருகோணமலை)

திருகோணமலை அன்பின் பாதை சமூகத்தின் எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் உளவியல் துறை பட்டதாரியான சேனையூர் மூதூரை பிறப்பிடமாகக் கொண்ட உளவளத் துணையாளர் பிரம்மியா சண்முகராஜாவின் "பிரமி" எனும் முதலாவது கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை மாலை 4 மணியளவில் திருகோணமலை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் இலக்கிய வட்டத்தின் தலைவர் கனகதீபகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்கு கலை இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் வருகை தருமாறு இலக்கிய மன்றத்தினர் அழைப்பு விடுக்கின்றனர். (4-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 150 | 240 | 240 |
| உருளைக்கிழங்கு | 170 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 180 | 280 | 200 |
| தக்காளி | 200 | 200 | 240 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 150 | 200 | 160 |
| கோவா | 180 | 200 | 240 | 240 |
| கரட் | 300 | 350 | 350 | 400 |
| பூசணி | 80 | 120 | 100 | 140 |
| புடோல் | 200 | 200 | 150 | 240 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 140 |
| சின்ன வெங்காயம் | 550 | 500 | 650 | 600 |
| பெரிய வெங்காயம் | 280 | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 550 | 500 | 450 | 500 |
| வெண்டக்காய் | 160 | 200 | 160 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 150 |
| பயற்றங்காய் | 550 | 400 | 450 | 400 |
| லீக்ஸ் | 450 | 400 | 450 | 450 |
| பீற்றூட் | 400 | 350 | 350 | 450 |
| கறிமிளகாய் | 700 | 750 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 700 | 1000 |
| போஞ்சி | 300 | 250 | 280 | 400 |
| கத்தரிதம்புள்ள | 180 | 100 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 180 | 160 | 180 | 150 |
| தேசிக்காய் | 150 | 200 | 150 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 60 | 70-90 |
| இராசவள்ளி | 250 | 350 | 300 | 280 |
| வெங்காயப்பூ | -- | -- | -- | -- |
| முள்ளங்கி | 180 | 240 | 180 | 240 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 120 | 60 |
| வல்லாரை | 50 | 50 | 50 | 40 |
| ஈரப்பலா | 100 | 140 | 120 | 150 |

# பன்றி இறைச்சி, துப்பாக்கிகளுடன் கிளிநொச்சியில் ஒருவர் கைது

(தருமபுரம்)

சிறப்பு அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலுக்கமைய கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கண்டாவளை கூவா மாவடி பகுதியில் எட்டு கிலோ பன்றி இறைச்சி, மூன்று நாட்டு துப்பாக்கி மற்றும் அதன் உபகரணங்கள், T.56 துப்பாக்கி ரவைகள் மற்றும் மூன்று வாள்கள் என்பனவற்றுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் விசாரணைகளின் பின்னர் கிளிநொச்சி நீதி



மன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4-6-316)

# தொங்கு பாலத்தில் இருந்து
# விழுந்த பெண் மருத்துவமனையில்

(கரணவாய்)

இயக்கச்சி பகுதியில் இயங்கும் தனியார் பண்ணை ஒன்றின் தொங்கு பாலத்தில் இருந்து வீழ்ந்த இளம் குடும்பப் பெண் கால் முறிந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பண்ணைக்கு அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் சென்று வருகின்றனர்.

இந்நிலையில் வவுனியாவில் இருந்து வருகை தந்திருந்த இளங்குடும்பத்தினர் தொங்கு பாலத்தினூடாக பயணித்துள்ளனர்.

இதன் போது தொங்கு பாலம் ஆட்டம் கண்டு துள்ளி எழுந்துள்ளது. இதனால் அதில் நின்ற பெண் தூக்கி வெளியே வீசப்பட்டுள்ளார். தூக்கி வீசப்பட்ட பெணணின் காலில் முறிவு ஏற்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளான பெண் நோயாளர் காவுவண்டி வரவழைக்கப்பட்டு அதன் மூலம் கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (4-6-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.நகர்ப் பகுதி...

பலாலி விமான நிலையம் மீளச் சேவையை ஆரம்பித்தமையைக் கருத்திற்கொண்டு வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் பலாலிக்கும் யாழ். நகருக்குமான போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

திங்கள், செவ்வாய், வியாழன் மற்றும் சனி ஆகிய தினங்களில் காலை 10.50 மணிக்கு பலாலி விமான நிலையத்தை வந்தடையும் விமானமானது இதே தினங்களில் காலை 11.50 மணிக்கு சென்னை நோக்கி புறப்படும்.

இவ் விமான சேவையின் பயணிகளுக்காக, யாழ்.நகரின் புதிய தனியார் பேருந்து நிலையத்திலிருந்து குறித்த தினங்களில் காலை 8.00 மணிக்கு பலாலி விமான நிலையத்துக்கும் அவ்வாறே விமான நிலையத்திலிருந்து நண்பகல் 12.00 மணிக்கு யாழ்.நகரை நோக்கியும் பேருந்து சேவை இடம்பெறும்.

தேவையேற்படின் புகையிரத நிலையம் வரையிலும் சேவை மேற்கொள்ளப்படும்.

இதற்காக ஒரு பயணிக்கான ஒரு வழிக் கட்டணமாக ரூபா.500.00 அறவிடப்படும். பயணப் பொதி ஒன்றுக்கான கட்டணமாக ரூபாய் 200.00 அறவிடப்படும்.

இது தொடர்பான மேலதிக விடயங்களுக்கு யாழ்.மாவட்ட பேருந்து நிலையப் பொறுப்பதிகாரியின் 076 537 8432 தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்புகளை மேற்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## முதியவர்...

உயிரிழந்துள்ளார்.

குறித்த முதியவர் நேற்று முன்தினம் மதியம் முதல் காணாமல்போயிருந்த நிலையிலேயே நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஒஸ்கா லேன் பகுதியை சேர்ந்த 65 வயது முதியவர் ஒருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையின் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

## கிணற்றிலிருந்து...

என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## இந்திய...

குமார், இன்று இலங்கைக்கு விஜயம் செய்ய வுள்ளதாக இந்திய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதியன்று திட்டமிடப்பட்டுள்ள, திருகோணமலை கடற்படை மற்றும் கடல்சார் கல்வியகத்தின் ஆணையிடும் அணிவகுப்புக்கு தலைமை விருந்தினராக அவர் அழைக்கப்பட்டுள்ளார்.

இந்த விஜயத்தின்போது, ஹரி குமார், இலங்கையின் சிரேஷ்ட மற்றும் பாதுகாப்புத் தலைமைகளுடன் பேச்சு நடத்துவார்.

அத்துடன் அவர் இலங்கை ஆயுதப் படையின் ஏனைய பாதுகாப்பு நிறுவனங்களுக்கும் விஜயம் செய்து பல்வேறு இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு நடவடிக்கைகளின் முன்னேற்றங்களை மீளாய்வு செய்வார் என அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7,104)

## ஹெரோயினுக்கு...

கின்றன.

ஹெரோயின் போதைப்பொருளுக்கு அடிமையான மன்னார் பள்ளிமுனைப் பகுதியைச் சேர்ந்த இளைஞனே உயிரிழந்துள்ளார்.

இதய வால்வில் ஏற்பட்ட கிருமி தொற்று காரணமாக குறித்த இளைஞன் உயிரிழந்துள்ளதாக பிரேத பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## நாவலர் மாநாடு...

இந்து கலாசார அலுவல்கள்திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இம்மாநாட்டில் காலை, மாலை அமர்வுகளாக நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வுகளில் காலை அமர்வுகளில் கருத்தரங்குகளும் மாலையில் பொது அரங்க நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

சமயத் தலைவர்கள், அறிஞர் பெருமக்கள் பலரும் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ள இந்நிகழ்வில் பொதுமக்கள் அனைவரையும் பங்கேற்றுப் பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ம)

## யாழ்.சர்வதேச...

பமாகியது.

இதன்படி அலையன்ஸ் எயார் லைன்ஸ் என்ற விமான சேவை நிறுவனம் சென்னையில் இருந்து பலாலிக்கு விமான சேவையை ஆரம்பித்தது.

வாரமொன்றுக்கு இந்த விமான சேவை நிறுவனத்தினால் நான்கு தினங்களுக்கு சேவைகள் நடத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பயணியொருவர் 20 கிலோ வரை பொருட்களை விமானத்தில் எடுத்துச் செல்ல முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பலாலி விமான நிலையப் பணிகள் கடந்த காலங்களில் இடைநிறுத்தப்பட்டிருந்தன. இந்நிலையில் மீண்டும் விமான சேவை ஆரம்பமாகியது.

இந்தியாவின் அலையன்ஸ் எயார் லைன்ஸ் விமானம் சென்னையில் இருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் விமான நிலையத் தில் திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு தரையிறங்கியது. நேற்றைய ஆரம்ப நிகழ்வுக்காக இந்திய பயணிகள் 28 பேர் வருகை தந்தனர்.

இதையடுத்து யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் அலையன்ஸ் எயார் லைன்ஸ் (Alliance Air) விமானிகளால் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ, வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, யாழ்மாவட்ட செயலாளர் க.மகேசன் சுற்றுலா துறை பிரதிநிதிகள், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ம-7,33,104)

## அவதா...

இவ்வாறான அழைப்புக்கள் மற்றும் குறுஞ்செய்திகளின் ஊடாக வெளிநாட்டுத் தொழிலுக்கு அனுப்புவதாக வாக்குறுதியளித்து அல்லது பல்வேறு பெறுமதிவாய்ந்த பொருட்களைக் கொண்ட பொதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு சுங்கத் தீர்வைகளைச் செலுத்துமாறு தெரிவித்து பாரிய மோசடி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது போன்ற மோசடிகள் மூலம் தனிப்பட்டவர்களிடமிருந்து பண மோசடி செய்வது தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களால் வழங்கப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை அண்மைக்காலங்களில் பாரியளவில் அதிகரித்துள்ளது.

எனவே, முறையான சரிபார்த்தலின்றி குறித்த தகவல்களின் அடிப்படையில் இனந்தெரியாத தரப்பினர்களின் வங்கிக் கணக்குகளுக்கு பணத்தை வைப்பிலிட வேண்டாம் என்றும் அல்லது வேறு வழிகளில் பணம் அனுப்ப வேண்டாம் என்றும் நிதியியல் உளவறிதல் பிரிவு பொதுமக்களை வலியுறுத்துகின்றது.

மாறாக இதுபோன்ற குறுஞ்செய்திகள், மின்னஞ்சல் செய்திகள் கிடைக்கப் பெற்றால், நிதியியல் உளவறிதல் பிரிவின் 011-2477125, 011-2477509 என்ற இலக்கங்களுக்கு அழைத்து அறிவிக்குமாறு மத்திய வங்கி அறிவித்துள்ளது. (ம-7)


ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு திகதி 12/12/2022 — சீட்டிழுப்பு இலக்கம் 1422 — வெற்றி இலக்கங்கள்: ரிஷபம் 4 8 1 5 9 9 — தேசிய லொத்தர் சபை

தன நிதானய — திகதி 2022.12.12 — சீட்டிழுப்பு இலக்கம் 997 — H 17 51 59 77 — ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

கொவிசெத — திகதி 2022.12.12 — சீட்டிழுப்பு இலக்கம் 3209 — ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 35 42 46 53 — தேசிய லொத்தர் சபை

மெகா பவர் — திகதி 12/12/2022 — சீட்டிழுப்பு இலக்கம் 1315 — V 08 41 59 64 80

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2022.12.12 — சீட்டிழுப்பு இலக்கம் 276 — கன்னி 12 13 34 57 கன்னி — தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத — திகதி 2022/12/12 — சீட்டிழுப்பு இலக்கம் 4967 — A 1 1 2 2 6 2 — தேசிய லொத்தர் சபை

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 1942 — நிறம் ஊதா — சீட்டிழுப்பு திகதி 2022.12.12 — தினம் திங்கட்கிழமை — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,614,660/- — N 29 56 67 73 — 9765 — 514

சனிதா — திங்கட்கிழமை — சீட்டிழுப்பு திகதி : 2022.12.12 — சீட்டிழுப்பு இல : 4103 — வர்ணம் : நீலம் — ரூ. 3,962,860/- — வெற்றி இலக்கங்கள் 12 36 38 62 F

ராசி — சுப்பர் ஜக்பொட் ரூ. 2,319,151/- — திகதி 2022-12-12 — வெற்றி வாரம் 3654 — வர்ணம் மஞ்சள் — வெற்றி இலக்கங்கள் 08 27 42 57 — ரூ. 9,399,280/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — D 25 24 34 40 53 — சீட்டிழுப்பு வாரம் 1118 — வர்ணம் இள நீலம் — திகதி 2022.12.12 திங்கட்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 285,086,897.80 — தொலை பேசி : 011-2 333 546/7 — Web: www.dlb.lk

ஜயோதா Jayoda — சீட்டிழுப்பு வாரம் 1878 — சீட்டிழுப்பு திகதி 2022-12-12 — வெற்றி இலக்கங்கள் 11 39 59 64 P — எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 37,846,104/- — தொ. பே. : 0112 333 546/47 — Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI — திங்கட்கிழமை — சீட்டிழுப்பு இல : 1788 — வர்ணம் : சிவப்பு — சீட்டிழுப்பு திகதி : 2022.12.12 — ரூ. 4,102,460/- — வெற்றி இலக்கங்கள் 08 38 62 64 F


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (13726)

**076 825 7716** (ஆகாஸ்)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127



## தையல் வேலைக்கு வேலையாட்கள் தேவை

யாழ். நகருக்கு அண்மையில் இயங்கும் தையல் நிலையத்திற்கு தையல் வேலை செய்யக்கூடிய பெண் வேலையாட்கள் தேவை. (தங்குமிட வசதி உண்டு) திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். (C-5490)

**077 918 1090**



## காரியாலயத் தொழிலாளி தேவை

திருநெல்வேலியிலுள்ள எமது காரியாலயத்திற்கு காரியாலயத்தை துப்பரவாக வைத்திருக்கக்கூடிய தொழிலாளி தேவை. வயதெல்லை 45 இலிருந்து 60. தங்குமிட வசதி உண்டு. திருநெல்வேலிக்கு அண்மையில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. (13759)

**074 368 0029**



# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 100 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- A32 பிரதான வீதியில் இருந்து 600m தூரம்.
- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும் சாவகச்சேரி நகரத்திற்கும் அரச தனியார் பஸ் போக்குவரத்துச் சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்)
- நல்ல தண்ணீர் ஊற்றுச்சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)

ஒரு பரப்பின் விலை **675,000** ரூபாய் மட்டும்

**தரகர் தேவையில்லை**

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை (13758)

தொடர்பு - ஜெயம்

**077 814 7389, 077 986 5457**



## பராமரிப்பாளர் தேவை



நடக்க முடியாத முதியவரை வீட்டில் வைத்து பராமரிப்பதற்கு அனுபவம் உள்ளவர் தேவை

தகுதி :- 40 வயதிற்குட்பட்ட ஆண்
சம்பளம் :- 50,000/= (C-5493)

தொடர்புகளுக்கு :- 077 706 8777



## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
**V2 TRAVELS** (C-5494)

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • கோப்பாய் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • புத்தூர் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • பண்டத்தரிப்பு • சங்கானை • புதுக்குடியிருப்பு • திருகோணமலை

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -20,000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -35,000/-

49A, [illegible] யாழ்ப்பாணம்.
0777-068-777



# பொருளியல்

## கருத்தரங்கு A/L 2022

**S.Jeyakumar**
B.A(Hons), Econ spl, MA in Econ(pera), PGDE

- பரீட்சை எதிர்பார்ப்பு வினா - விடைகள்
- புள்ளித்திட்ட விளக்கம்
- தேர்ச்சி அடிப்படையிலான மீட்டல்
- கையேடுகள் வழங்கப்படும்

ஆரம்பம் : 15.12.2022 வியாழக்கிழமை பி.ப 2.30
இடம் : New Science Hall, Jaffna

- வெளி மாணவர்கள் NEC கல்வி நிறுவனத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும். (T.P : 076 535 0999)
- Zoom செயலி மூலமும் கருத்தரங்கு நடைபெறும்.

**077 723 8597, 076 535 0999** (13743)



# காணி விற்பனைக்கு

## யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியில் 33 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A9 பிரதான வீதியில் இருந்து 700 m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 185 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன.(பைப் லைனிங்)
- தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்கப்படும்.
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தரகர் தேவையில்லை**

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை (13746)

தொடர்பு - ஜெயம்

**077 986 5457, 077 814 7389**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.